# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Al-Ain, UAE




# மன்னா..

**நீ வயலில் விதைத்த உன் பயிர்**
**வேலைகளின் முதற் பலனைச்**
**செலுத்துகிற அறுப்புக்கால**
**பண்டிகையையும். வருஷ முடிவிலே நீ**
**வயலில் உன் வேலைகளின் பலனைச்**
**சேர்த்துத் தீர்த்தபோது, சேர்ப்புக்கால**
**பண்டிகையையும்**
**ஆசாரிப்பாயாக...**

யாத்திராகமம் 23:16




பொழிவு: 14
ஆகாரம்: 02

February '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>5:00 PM<br>6:30 PM | CHILDRENS BIBLE SCHOOL<br>GENERAL ASSEMBLY & BIBLE CLASSES<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| SAT<br>7:45 PM<br>9:00 PM | 1ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| SUN<br>10:30 AM<br>01:00 PM | 1ST SUNDAY OF EVERY MONTH<br>MONTHLY FASTING PRAYER<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>07:30 PM<br>09:00 PM | 2ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>07:30 PM<br>09:00 PM | 3RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| FRI<br>07:30 PM<br>09:00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

FOR MORE DETAILS PLEASE CONTACT:

**THE PRESBYTER REV. S.P. BASKAR**

**056 766 8348 / 03 766 8353**

# From Pastor's Desk...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**கர்த்தாவே, தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினிடையே கனிகளின் முதற் பலனைக் கொண்டு வந்தேன் என்று சொல்லி, அதை உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, உன் தேவனாகிய கர்த்தருடைய சன்னிதியில் பணிந்து. உபாகமம்:26:10**

'And now, behold, I have brought the first fruits of the land which you, O Lord, have given me.' Then you shall set it before the Lord your God, and worship before the Lord your God.-Deuteronomy: 26:10

## சேர்ப்பின் பண்டிகை (**Harvest Festival**)

இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, பாதுகாப்பிற்காக, நிறைவான வாழ்விற்காக, கடவுள் தந்த பல்வேறு ஆசீர்வாதங்களுக்காக தங்கள் நிலத்தின் முதல் பலனை கொண்டுவந்து கடவுளின் முன்னிலையில் வைத்து கடவுளைத் தொழுது கொண்டார்கள் அந்த நாள் சேர்ப்பின் பண்டிகை அல்லது அறுவடை பண்டிகை என்று அனுசரிக்கப்பட்டது.....

அந்த நாளை நினைவுகூர்ந்து இன்றைக்கும் திருச்சபை குடும்பங்களாக, கடவுளின் பிள்ளைகளாக நாமும் கடவுள் செய்த நன்மைகளை நினைத்து பார்த்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாக இந்த சேர்ப்பின் பண்டிகையை கொண்டாட அழைக்கப்படுகிறோம்......

வருகின்ற பிப்ரவரி 12-ஆம் நாள் சனிக்கிழமை நடைபெற இருக்கின்ற சேர்ப்பின் பண்டிகை (Harvest Festival-2022)-க்காக ஜெபிக்குமாறும், குடும்பங்களாக உங்களது பங்களிப்பை (பொருட்களாக, பணமாக) கொண்டுவந்து பிப்ரவரி 5,12-ஆம் தேதி (சனிக்கிழமை) நடைபெறும் ஆராதனைகளில் படைத்து திருச்சபையின் வளர்ச்சிப் பணியில் உங்களை இணைத்துக் கொள்ளுமாறு அழைக்கப்படுகிறிர்கள். இதைக் குறித்ததான கூடுதல் விவரங்களை நமது திருச்சபையின் சேப்பின் பண்டிகையின்

ஒருங்கிணைப்பாளர் திரு.D. ராஜவேல் மற்றும் செயலர் திரு. சுரேஷ்ராஜன் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்....

மேலும் இந்த ஆண்டு சேர்ப்பின் பண்டிகையில் ஒவ்வொரு வாரமும் உணவு மற்றும் தின்பண்டங்கள் கொடுத்து திருச்சபையின் வளர்ச்சி பணியில் தங்களை இணைத்துக் கொண்ட அனைத்து குடும்பங்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த உன்னதமான பணியில் தங்களை இணைத்துக் கொண்டு ஒருங்கிணைத்த திருமதி.ஜாக்குலின் மில்கா மற்றும் திரு.D. ராஜவேல் அவர்களையும் வாழ்த்துகிறோம்; திருச்சபையின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்...

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகிற நம்முடைய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த கொராண தொற்றுநோய் தொடர்ந்து நமது தேசங்களில் பரவி வருகிறது என்பதை நாம் அறிந்து வருகிறோம். இந்த இக்கட்டான காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் **Zoom** வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

**லெந்து கால தின தியானம்:** வருகின்ற மார்ச் மாதம் 2ஆம் தேதியிலிருந்து தபசு (லெந்து) காலங்களை திருச்சபை குடும்பமாய் அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். இந்த நாட்களில் தினமும் காலை:6:00 மணிக்கு தின தியானம் நடைபெறும் திருச்சபை குடும்பத்தினர் ஜெபத்துடன் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

தொடர்ந்து திருச்சபையின் வளர்ச்சியிலும், ஊழியத்திலும்,திருச்சபை குடும்பங்களிலும், நமது பிள்ளைகளின் வாழ்விலும், கல்வியிலும் ஆண்டவர் அநேக ஆசீர்வாதங்களை கொண்டுவரும் படியாய் ஜெபிக்கும்படியாகவும். அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

*Rev.S.P. Baskar*




# அறுவடைப் பண்டிகை

நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற் பலனைச் செலுத்துகிற அறுப்புக்காலபண்டிகையையும். வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்த்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசாரிப்பாயாக.. யாத்திராகமம்:23:16.

You shall keep the Feast of Harvest, of the first fruits of your labor, of what you sow in the field. You shall keep the Feast Ingathering at the end of the year when you gather in from the field the fruit of your labor. Exodus 23:16

**முன்னுரை:** கடவுள் படைத்த மனுக்குலத்தின் வாழ்வில் பண்டிகைகள் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் கொண்டாடப்பட்ட பண்டிகைகள் கடவுளின் செயல்பாட்டை மையமாக வைத்து அமைந்தவை ஆகும். கடவுள் அவர்களின் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து கடவுளுக்கு நன்றி செலுத்த பண்டிகைகளை அனுசரித்து வந்தனர் அந்த பண்டிகைகளில்....

**பஸ்கா பண்டிகை- புளிப்பில்லாத அப்பப் பண்டிகை:** பஸ்கா பண்டிகையில் ஆடுகளை பலி செலுத்துவது மிகச்சிறந்த ஒரு அம்சமாகும்.(உபா:16:18) கானான் நாட்டில் ஏழு நாட்களாக கொண்டாடப்பட்ட புளிப்பற்ற அப்பப் பண்டிகையோடு பஸ்கா ஆசரிப்பும் இணைந்து கொண்டாடப்பட்டது. இந்தப் பண்டிகை இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டதை நினைவுகூர்ந்து கடவுள் அருளிய விடுதலைக்காக கொண்டாடப்பட்டவை ஆகும்.

*Feast of Ingathering*

**கூடாரப் பண்டிகை/சேர்ப்பின் பண்டிகை:** இந்தப் பண்டிகை விவசாயத்தை அடையாளப்படுத்தும் பண்டிகை ஆகும். யாத்:23:16-இல் சேர்ப்பின் பண்டிகையைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பண்டிகை ஆண்டின் முடிவை குறிப்பிடுவது மட்டுமின்றி புதுவருட ஆரம்பத்தையும் குறிக்கிறது. இந்த பண்டிகை இஸ்ரயேல் மக்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததை நினைவுபடுத்துவது ஆகும். வனாந்திரத்தில் தாங்கள் சிறிய கூடாரங்கள் அமைத்து தங்கியதை நினைவுகூர்ந்து பார்க்கும் பண்டிகையாகும். இதற்கு அடையாளமாக இந்நாட்களில் வீட்டிற்கு வெளியே கூடாரம் அமைத்து அதில் தங்கின என்பது குறிப்பிடத்தக்கது...

பண்டிகை கொண்டாடுவதின் நோக்கம்.........

**கடந்த கால வாழ்வை நினைவு கூறுதல்....**

## Remembering the Past -உபா 26:1-8

எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேல் மக்களின் கண்ணீரை, அழுகையை கண்டு நான் உங்களை காண்கின்ற ஆண்டவர் என்று கூறி அவர்களின் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்து ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்ன கானான் நாட்டில் சேர்த்தமைக்காக நினைவுகூர்ந்து நன்றி செலுத்தி கொண்டாடுவது ஆகும். அத்துடன் 40 ஆண்டுகள் வனந்திர வாழ்வில் உடனிருந்து செங்கடலை கடந்து செல்லும்போது வழிநடத்தியது. இவைகளை நினைத்து கடந்தகால வாழ்வில் கடவுள் செய்த நன்மைகளை நினைத்து கொண்டாடும் பண்டிகை ஆகும்.....

**கடவுள் செய்த செயலுக்கு ஈடாக நன்றி செலுத்துதல்......**

## Reciprocate in giving

இஸ்ரயேல் மக்களை பாதுகாத்து, பராமரித்து, வழிநடத்திய கடவுளுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை ஆகும். நிலையற்ற நாடோடி வாழ்வை மாற்றி நிலையான குடியுரிமை பெற்ற மக்களாய் வாழ்ந்த வாழ்வு கொடுத்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாகும். ஆடு மெய்க்கும் தொழிலை செய்தவர்களுக்கு நிலையான நிலங்களைக் கொடுத்து அவர்களுக்கு விவசாயம் செய்யவைத்து நிலத்திற்கு சொந்தக்காரராக மாற்றி அமைப்பதற்காக முதல் பலனாக முதல் விளைச்சல், முதல் கனிகள் இவைகளை ஆண்டவர் செய்த செயலுக்கு ஈடாக நன்றி செலுத்தி கொண்டாடும் பண்டிகை ஆகும்....

**குறைவில்லாமல் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளுதல்....**

## Rejoice is Sharing உபா 26:11

ஆண்டவர் இஸ்ரவேலரை வனாந்திரத்தில் வழி நடத்தின போது ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் போதுமான யாவற்றையும் சமமாக அருளினார். கானான் தேசத்தில் குடியேறின போதும் அனைவருக்கும் நிலங்கள், உடமைகள் அனைத்தையும் சமமாக பங்கிட்டு கொடுக்கப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் குறைவில்லாமல், ஏற்றத்தாழ்வு

இல்லாமல் அனைவரும் சமமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட எண்ணங்களோடு எல்லோருக்கும் குறிப்பாக இல்லாதவர்களுக்கும் குறைவில்லாமல் மகிழ்ந்து பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இதுவே இந்தப் பண்டிகையின் நோக்கமாகும்....

**நிறைவாக:** இன்றைக்கு நாமும் திருச்சபை குடும்பங்களாக இந்த குடும்ப பண்டிகையான அறுவடை ஸ்தோத்திர பண்டிகை மகிழ்ச்சியோடு கடவுள் நம்முடைய வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும், பகிர்ந்து வாழவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். என்பதை உணர்ந்து இந்த பண்டிகை கொண்டாட அர்ப்பணிக்க, அழைக்கப்படுகிறோம்.....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

அருட்பணியில் உங்கள் ஆயர்...

*Rev.S.P.Baskar*





# மாற்றம் உருவாக்கிய பெண்கள்

எண்ணாகமம்:27:1-11

யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலெயாத்துக்குப்பிறந்த ஏபேருக்குப் புத்திரனாயிருந்த செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள்,ஒக்லாள்,மில்காள்,திர்சாள் என்பவர்கள். எண்ணாகமம் 27:1

Then drew near the daughters of Zelophe had the son of Hepher, son of Gilead, son of Machir, son of Manasseh, from the clans of Manasseh the son of Joseph. The names of his daughters were: Mahlah, Noah, Hoglah, Milcah, and Tirzah. Numbers 27:1

இந்த பகுதியில் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்ற பெண்களைக் குறித்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இந்தப் பெண்கள் தகப்பனை இழந்தவர்கள், இவர்களுக்கு சகோதரர்கள் இல்லை. இந்த நிலையில் ஆதரவற்று நின்றபோது அவர்களுக்கு ஆசாரிப்பு கூடார வாசல் மட்டுமே அடைக்கலமாய் இருந்தது. செலோபியாத்தின் குமாரத்திகளாகிய இவர்கள் தகப்பனை இழந்தபோது தங்களின் இக்கட்டான சூழலில் துணிச்சலுடன் வாழத் தொடங்கினார்கள். பெண்களுக்கு சொத்துரிமை அல்லது வாரிசு நிலை என்ற பேச்சுக்கே இடமில்லாத அந்த காலகட்டத்தில் வாழ்ந்தபோது பயப்படாமல் துணிச்சலுடன் பேசத் தொடங்கினார்கள். மோசேயையும் ஆசாரியராகிய எலியேசரையும், பிரபுக்களையும், சபையின் மக்களையும் சந்தித்து தங்களுக்கான நியாயமான உரிமையைக் கேட்டார்கள்.

இவர்களின் நியாயமான கேள்விகள்

- எங்கள் தகப்பன் கடவுளுக்கு விரோதமான கூட்டத்தை சேர்ந்தவர் அல்ல......
- எங்கள் தகப்பன் தம்முடைய சொந்த பாவத்தினால் மரித்தார்.....
- எங்கள் தகப்பனுக்கு குமாரர் (மகன்கள்) இல்லை இதனால் எங்கள் தகப்பனின் வம்சம் இல்லாமல் போகலாமா?

*Woman as Change Maker's...*

இப்படிப்பட்ட துணிச்சலான கேள்விகள் எழுப்பி ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.....

மக்லாள் என்றாள்....மனம் வருந்துகிறவர்....பலவீனமானவர்....சுகவீனமானவர்.... வேண்டுதல் செய்கிறவர்.... என்ற பொருளாகும்.

நோவாள் என்றாள்...அசைக்கின்றவர்....இயங்கவைக்கின்றனர்....-நிலையற்று நிற்பவர்.... மாற்றம் உருவாக்குகின்றவர் என்று பொருளாகும்......

ஒக்லால் என்றாள்....உயர்ந்த இடங்களை தவிர்க்கும் பறவை....வேட்டையாடுகின்றன பறவை....வேறு இடம் செல்லாத பறவை...என்ற பொருளாகும்.

மில்கால் என்றாள்....அரசி என்ற பொருளாகும்....

திர்சாள் என்றாள்....சாதகமானவர்....ஏற்றுக் கொள்பவர்....மன உறுதியுடையவர்...... திருப்தியாக்கக்கூடியவர்..... என்ற பொருளாகும்.

இப்படிப்பட்ட நல்ல பண்புகளை உடைய பெயரின் அர்த்தமுள்ள இந்தப் பெண்கள் தங்கள் தகப்பனின் சொத்துக்கு உரிமை கேட்கிறார்கள், தங்கள் தகப்பனின் மரணத்திற்கு அவரே காரணம் என்றும், அவர் கடவுள் பயம் உள்ளவர் என்பதையும், அவருக்கு குமாரர் இல்லை என்பதையும் அவர்கள் முன்வைக்கிறார்கள். அவர்களின் கோரிக்கை அன்றைய காலகட்டத்தில் மறைக்கப்படாமல் மோசே இந்த கோரிக்கைகளை கடவுளிடம் கொண்டு செல்கிறார். கடவுள் இந்த பெண்களின் நிலையை உணர்ந்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று இவர்களுக்கு தகப்பனின் சொத்துரிமை உண்டு என்று பதில் கொடுக்கிறார். அன்றைய காலக்கட்டத்தில் இருந்த சூழலில் ஒரு பெரும் மாற்றத்தை கடவுள் இந்த பெண்களின் வழியாக ஏற்படுத்தினார். இந்தப் பெண்களே மாற்றம் உருவாக்கிய பெண்களாக திருமறையின் வழியாக புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.....

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா..

*Mrs.E.Nancy Baskar*





# தப்புவிப்பேன்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டவர் தாமே இந்த மாதத்தில் எல்லா ஆசீர்வாதத்தோடும் ,ஐஸ்வரியத்தோடும், சுகத்தோடும், ஆசீர்வதிப்பாராக. இந்த மாதத்தில் கர்த்தர் நம்மை பார்த்து சொல்லுகிற வாக்குத்தத்தம் என்னவென்றால்

## *இனிமேலும் தப்புவிப்பேன் (ஏசா 46:4)*

என்பதாய் அதற்கு என்ன அர்த்தம் இதுவரைக்கும் தப்புவித்தேன் அல்லவா,இனிமேலும் தப்புவிப்பேன் என்று நம்மை தப்புவிக்க ஒருவர் வேண்டும் அவர் தான் இயேசு கிறிஸ்து, தமிழ் பாடல் இவ்வாறு சொல்கிறது கட்டுண்ட கள்வன் தானோ தன்னை விடுவித்துக்கொள்ள கூடுமோ என்று, அதற்கு என்ன அர்த்தம் கட்டப்பட்டர் அவரே, அவரை விடுவித்துகொள்ள முடியாது அவரை விடுவிக்க மற்றவர் மற்றொருவர் வேண்டும். அது போல தான் நம்மை இந்த கொள்ளை நோய்க்கும், பொல்லாத பிரபஞ்சத்திற்கும், நம்மை தப்புவிக்க இயேசு கட்டாயம் வேண்டும்.

## *தானியேலை தப்புவித்தவர் (தானி 6:16)*

அன்று தானியேலை சிங்கத்திற்கும், சிறைச்சாலைக்கும் தப்புவித்த ஆண்டவர். (தானி 6:27) இன்று நம்மை தப்புவிக்க வல்லவர். (தானி 6:16) நேபுகாத்நேச்சார் தானியேலை பார்த்து நீ இடைவிடாமல் ஆராதிக்கிற தேவன் உன்னை தப்புவிப்பார் என்றார், நாம் கூட இயேசுவை இடைவிடாமல் ஆராதித்தால், எந்த சூழ்நிலையிலும் அவரைத் துதித்தால் கர்த்தர் நம்மை இந்த உலகத்தின் பாவத்துக்கும், கொள்ளை நோய்க்கும் தப்புவிக்க வல்லவர் மட்டுமில்லை நல்லவரும் கூட…

## *தாவீதை தப்புவித்தவர் (1சாமு 17:37)*

தாவீது சொல்கிறார், சிங்கத்தின் வாய்க்கும், கரடியின் வாய்க்கும், தப்புவித்த கர்த்தர், இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார், என்றார். எவ்வளவு விசுவாசமுள்ள, நம்பிக்கையுள்ள, தாவீது பாருங்கள். கர்த்தர் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை. அதே போல தான் கர்த்தர் நம்மை தப்புவிக்க வல்லவர், இயேசுவால் நம்மை தப்புவிக்க கூடும், எந்தப் பெரும் போராட்டங்களிலும் இருந்து நம்மை விடுவிக்கவும், தப்புவிக்கும் அவரால் கூடும்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் நாம் இருப்போம் ஆனால் அவர் நம்மை பொல்லாத மனிதர் கையில் அகப்படாதபடி தப்புவிக்க முடியும்.

***இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்தவர் (யாத் 14:30)***

இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்தியரின் கைக்கு தப்புவிக்கும் படி தேவன் சமுத்திரத்தை பயன்படுத்தினார். புயல் போன்ற போராட்டங்கள் வந்தாலும் அலைகள் கொந்தளித்தாலும், பார்வோன் சேனை பின்துரத்தினாலும் இக்கரையில் இருந்து அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னவர் கட்டாயமாக கரை சேர்ப்பார் கலங்கவேண்டாம்.

பல பிரச்சனைகள் சூழ்ந்து வந்தாலும், பதினாயிரங்களில் சிறந்தவர் நம்முடன் இருக்கிறார் பயப்படவேண்டாம். நம்மை தப்புவிக்க அவர் நம்முடன் இருக்கிறார். நாம் ஆண்டவருடைய சமூகத்தில் நம்மைத் தாழ்த்தி, அவரை உயர்த்தி, அவருடைய பாதத்தில் காத்திருப்போம் ஆனால், அவர் நம்மை கொள்ளை நோய்க்கும் பாவத்திற்கும், சாபத்திற்கும், மரண கண்ணிக்கும் தப்புவிக்க அவரே ஆதியும், முடிவும் ஆக இருந்து நம்மை எதிர்ப்போர் மத்தியிலும், நம்மை சபிப்போர் மத்தியிலும் நம்மை வாழ வைத்து நம்மை உயர்த்தி ஆசீர்வதிப்பாராக.

ஆகவே கர்த்தர் நம்மை தப்புவிக்க, போராடி ஜெபிப்போம், பிறருக்காகவும், தேசத்திற்க்காகவும், ஜெபிப்போம் ஆண்டவர் நமக்கு ஜெயத்தையும் பலத்தையும் தந்து ஆசீர்வதிப்பாராக....

***ஆமென் அல்லேலூயா..!!!***



# KORIJHOLLA CHURCH PROJECT


# கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்




## கர்த்தருக்கு சித்தமானால்

## 23 - 04 - 2022

## ஆலய திறப்பு விழா



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலய வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட அனுதின ஜெபத்தாலும் ஒன்றிணைவோம்.**

## இணைந்து கட்டுவோம் வாருங்கள்




## THE GOD OF SCIENCE:

Scientifically, when a person tears it helps them to relieve stress by expelling the toxins. Crying also improves the mood since oxytocin and other good hormones are secreted, it also enhances our vision and keeps our eyes free from bacteria and so on….

## WHAT'S THE NEED?

Years ago, on a winter day as I was having my breakfast, I realized that my colleague came and sat beside me with an unhappy face. With much hesitance, I started the conversation to know the reason behind her sadness. At the end of my words started her weeping. Startled about the proceedings I just prayed to God to take control of the situation without uttering the next word. The maximum I could do is just pray for her tears without even knowing the reason.

I was sure, that's all she wanted from me and that's all that I could render to her at that moment.

## TEARS ARE GOOD:

Biblically (psychologically and physiologically) tears are good.
The 3 H's …… Hagar, Hannah and Hezekiah….

All three characters have torn for their own reasons to God and definitely, their tears never went in vain.

The God who saw Hagar's tears was the same God who saw Hannah's and Hezekiah's tears. Each of their tears was answered at the right time as per their belief.

women's fellowship

The God who answered Hagar, Hannah, and Hezekiah's tears are the same GOD who is capable of answering your tears too.

You may be weeping bitterly today for some reason, may it be for a job, for good health, for a shelter, for someone's love, or for a child.

Trust and wait on HIM. God has His perfect timing; He is never late nor early. It takes a little patience and a whole lot of faith… But it's worth the wait.

**Psalms 126:5  " Those who sow with tears will reap with songs of joy".**



# தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல்...



"யாக்கோபின் சந்ததியாரே இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்; தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கினேன்" (ஏசாயா 46:3).

ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில் தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் தாங்கினார். நடுவில் கைவிட்டுவிடுவாரா? அநேக வேளைகளில் தேவன் நம்மைக் கைவிட்டதாக எண்ணுகிறோம். ஆனால் நாம் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். தேவன் நம்மைத் தெரிந்துக்கொண்டவர். ஆகவே அவர் ஒருக்காலும் அவ்விதமாக செயல்படமாட்டார் என்பதைத் தெரிந்துக்கொள்ளுவோம். அவர் நம்மை அழைத்தவர். நம்மை நிச்சயமாக நீதியின் பாதையில் நடத்துவார்.

"இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" (ஏசாயா 48:17) என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய வாழ்க்கையில் கடைசிமட்டும் நம்மை வழிநடத்தும் ஒரு தேவனைக் கொண்டிருக்கிறோம். நம்மை ஒருநாளும் அவர் கைவிடமாட்டார். நம்முடைய சூழ்நிலைகள் மாறலாம். நம் உணர்வுகள் மாறலாம், ஆனாலும் தேவன் நம்மைக் கைவிடுகிறதில்லை. அவர் தம்முடைய திட்டத்தை மாற்றிக்கொள்வதுமில்லை. அவர் நம்முடைய வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் உண்மையுள்ளவராக இருந்து, நம்மைப் பெலப்படுத்துவார். ஆண்டவர் சொல்லுகிற காரியங்களைக் குறித்து நாம் சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு நாம் எண்ணுவோமென்றால் அது நம் பெலவீனமே. ஆண்டவர் அவ்விதமாகச் செய்கிறவர் அல்ல. ஆகவே நாம் தேவனைச் சார்ந்து கொள்ளுவோம். அவர் நிச்சயமாக நம்மைத் தாங்கிச் சுமந்து வழிநடத்துவார்.

*Youth Fellowship Article*

**வேதாகம ரகசியம்**

நம்முடைய கர்த்தராகிய தேவன் நமக்கு அருளியுள்ள ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிலும் மிகவும் விலையேறப் பெற்றது அவர் அருளின வேதமே. அதன் மகத்துவத்திற்கும் ஆழங்களுக்கும் எல்லையேயில்லை. அதன் ஒவ்வொரு எழுத்தும் வார்த்தையும் வசனமும் ஒரு சத்தியத்தை நமக்கு உணர்த்தும்.

பெரும்பாலும் வேதத்தில் நாமங்களின் (பெயர்கள்) வரிசையை நாம் கவனிக்காமலோ அல்லது வாசிக்காமலோ கூட விட்டு விடுவதுண்டு. அதிலே என்ன விசேசஷம் இருந்துவிடப் போகிறது என்றும் நினைக்கலாம். ஆனால் அவற்றிலும் பல ரகசியங்கள் அடங்கியுள்ளன. ஆதாம் துவக்கி நோவா வரையிலான முதல் பத்து தலைமுறையை நாம் சற்று கவனிக்கலாம். வேதத்தின் ஒவ்வொரு எழுத்திலும் வார்த்தையிலும் வசனத்திலும் ரகசியங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பெயர்களில் அப்படி என்ன ரகசியம் இருக்கிறது? அதைத் தான் நாம் பார்க்கப் போகிறோம்.. இந்த பத்து நபர்களின் பெயர்களோடு அதன் அர்த்தங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பெயர்கள் - பெயர்களின் அர்த்தங்கள்

1. ஆதாம் மனிதன் (Human)
2. சேத் - பதிலாக (Substitute)
3. ஏனோஸ் - சாகுதல் (சாகிறதற்கென்று) (Mortal)
4. கேனான் - நியமிக்கப்பட்ட ஒருவன்(ர்) (Appointed One)
5. மலாலெயேல் தேவனுடைய புகழ்ச்சி (Praise of God)
6. யாரேத் - மேலிருந்து கீழிறங்கினவன்(ர்) (Descent One)
7. ஏனோக்கு - அர்ப்பணிக்கப்பட்ட (Dedicated)
8. மெத்தூசலா - அவன்(ர்) மரணம் கொண்டு வரும்
9. லாமேக்கு - வல்லமையான (Powerful)
10. நோவா -இளைப்பாறுதல் (Rest)

இப்பொழுது இந்தப் பெயர்களின் அர்த்தங்களை மேலிருந்து கீழ் நோக்கி வரிசையாக வாசித்துப் பார்க்கலாம்

“மனிதனுக்குப் – பதிலாக – சாகிறதற்கென்று - நியமிக்கப்பட்ட ஒருவர் - தேவனுடைய புகழ்ச்சியோடு- மேலிருந்து கீழிறங்கினவர் – அர்ப்பணிக்கப்பட்ட அவர் மரணம் கொண்டு வரும் – வல்லமையான – இளைப்பாறுதல் “

முதல் பத்து நபர்களின் பெயர்களில் எவ்வளவு மேன்மையான சுவிசேஷத்தின் ரகசியம் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது!! தேவ குமாரன் மனிதனுக்குப் பதிலாக மரணிக்கும்படிக்கு தேவனுக்குரிய அதே புகழ்ச்சியோடு மேலிருந்து (பரலோகத்திலிருந்து) கீழிறங்கி வரப் போவதையும், அவருடைய மரணத்தினாலேயே ஒருக்காலும் நாம் இழந்து போக கூடாத வல்லமையான இளைப்பாறுதல் கிடைக்கப் போவதையும் தேவன் எவ்வளவாய் முன்னறிவித்திருக்கிறார்.

# FEBRUARY


## Birthdays

| | |
|---|---|
| 2-Feb | Baby. Jessica D/o Mr. Ashok Kumar |
| 2-Feb | Mr. Naveen S/o Mr. Shankaran |
| 07-Feb | Mrs. Abisha W/o Mr. Suresh Babu |
| 12-Feb | Rev. M. Christopher Rajendran |
| 13-Feb | Mr. S. Jensin Bose S/o Mr. Selva Kumar |
| 14-Feb | Ms. Jayne John Joseph D/o Mr. John Joseph |
| 15- Feb | Ms. Patricia Leenus Obed D/o Mr. Mr. Patric |
| 17-Feb | Mr. Sunith Samuel |
| 20-Feb | Baby. Liana Ann D/o Mr. Sunith Samuel |
| 20-Feb | Mstr. Jason Eric S/o Mr. Daniel |
| 22-Feb | Mrs. Jeyantha W/o Mr. Belfer John |
| 25-Feb | Dr. Giftus Marvin S/o Mr. M. Nesamony |
| 25-Feb | Ms. Mukila D/o Mr. Ravi Chandran |
| 25-Feb | Mrs. Babitha Babu W/o Mr. Babu Abraham |
| 25-Feb | Baby. Hazel Hartlyn D/o Mr. Herchil Harish |
| 26-Feb | Mr. Lokesh S/o Mr. Shankaran |
| 27-Feb | Mr. Dienshan |




| | |
|---|---|
| 11-Feb | Mr. Justin Oliver & Mrs. Sahila Grace Justin |
| 24-Feb | Mr. A. Ravichandran & Mrs. R. Muneeswari |

KIDS ZONE COLOURING



# Coded Words for Jesus Walked on Water

Each number stands for a letter of the alphabet. Write the correct letter in the blank to find the coded words and phrase.

**Code key**

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

___ ___ ___ ___ ___
23 1 22 5 19

___ ___ ___ ___ ___
6 1 9 20 8


___ ___ ___ ___ ___
4 15 12 2 20

___ ___ ___ ___ ___ ___
23 1 12 11 5 4

___ ___ ___ ___ ___ ___ ___ ___
13 9 18 1 3 12 5 19

**JESUS** ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
4 9 4 1 13 1 26 9 14 7

___ ___ ___ ___ ___ ___ .
20 8 9 14 7 19



# JESUS' "I AM" STATEMENTS

In the Gospel of John, we read that Jesus made seven "I am" statements about Himself, helping us to know Him better. See if you can unscramble the letters below to finish Jesus' "I am" statements. Then, find the words that you wrote in the word search at the bottom of the page.

"I am the ______________ of life." (John 6:35)
ARDEB

"I am the ______________ of the ______________." (John 8:12)
GIHLT — RODLW


"I am the ______________." (John 10:9)
ROOD

"I am the ______________ ______________." (John 10:11)
OGOD — PEREDHHS

"I am the ______________ and the ______________." (John 11:25-26)
STONIREURCRE — FIEL

"I am the ______________, the ______________, and the life." (John 11:25-26)
AYW — THUTR

"I am the ______________." (John 15:5)
NIEV



| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | E | T | L | H | D | R | E | H | P | E | H | S |
| A | G | H | B | T | R | O | W | W | N | N | T | G |
| E | O | G | O | R | T | R | O | R | G | N | U | R |
| N | O | I | T | C | E | R | R | U | S | E | R | D |
| E | D | L | E | N | B | A | L | I | F | E | T | Y |
| U | O | E | I | G | F | I | D | O | O | R | A | O |
| R | L | V | R | L | N | L | A | R | L | W | E | O |

# JESUS' MIRACLES

**How much do you know about Jesus' miracles? Use the clues below to complete the crossword puzzle. If you can't remember, use the Bible references to find the answer.**

## Across:

2. After being woken up by His disciples, Jesus rebuked me - and I obeyed Him. (Matt. 8:23-27)

5. Jesus raised my daughter from the dead. (Mark 5:21-24, 41-42)

7. Once a despised (and short!) tax collector, Jesus saved me when I was lost. (Luke 19:1-10)

8. When I saw Jesus walking on water, I got out of the boat and walked on water too. (Matt. 14:26-29)

9. Though a Roman, I believed that Jesus could heal my servant, even from a distance. (Matt. 8:5-13)

10 & 11. Jesus miraculously fed 5,000 men (plus women and children!) by dividing us: five (10) and two (11). (Matt. 14:15-21)


## Down:

1. Though I had been dead for four days, Jesus called me out of the tomb. (John 11:38-44)

3. When Jesus healed ten lepers, I was the only one to turn back to say "Thank you." (Luke 17:11-19)

4. At  a wedding, Jesus changed me into wine. (John 2:1-11)

6. I was a blind beggar, but Jesus healed my eyes. (Mark 10:46-52)









## How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.

# January

## You did it! Congratulations

| Kidz Colouring | Code Word | Word Search | Cross word | Bible Quiz |
|---|---|---|---|---|
| JESIL BERNICE | JANIA PRENI | JOHAN SANJO | JASON ERIC | ROSHAN |
| JANIA PRENI | HAZEL HARTLYN | JASON ERIC | JONATHAN | JOSHUA |
| JOHAN SANJO | JOHAN SANJO | JEMIMA | JOSHUA | |
| HAZEL HARTLYN | JASON ERIC | JEREMIAH | | |
| REAGAN SHAN | JEREMIAH | JONATHAN | | |
| CHRIS GABRIEL | JEMIMAH | JOSHUA | | |
| JEMIMA ASHNI | JONATHAN | | | |
| | JOSHUA | | | |




## Dec'2021 Manna Participants
(Names Missed out)

Baby. Jesil Bernice ( Kids Coloring)
Mr. Joshua (Word Search, Cross Word & Quiz)

You can also download our Monthly Manna in our Church Website

**http://www.csitamilparishalain.org**

சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us on or before 20th of every month, in the following format.

***Email Subject:** Your name / Quiz type / Month-Year*

***To Church Email:** csitcalain@gmail.com*

TURNING POINT'S

# 365-DAY BIBLE READING PLAN

One of the best ways to know God is to become acquainted with the full counsel of His written Word. This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.


## FEBRUARY

1 Leviticus 14 – 15
2 Leviticus 16 – 18
3 Leviticus 19 – 21
4 Leviticus 22 – 23
5 Leviticus 24 – 25
6 Leviticus 26 – 27
7 Numbers 1 – 2
8 Numbers 3 – 4
9 Numbers 5 – 6
10 Numbers 7
11 Numbers 8 – 10
12 Numbers 11 – 13
13 Numbers 14 – 15
14 Numbers 16 – 18
15 Numbers 19 – 21
16 Numbers 22 – 24
17 Numbers 25 – 26
18 Numbers 27 – 29
19 Numbers 30 – 32
20 Numbers 33 – 36
21 Deuteronomy 1 – 2
22 Deuteronomy 3 –4
23 Deuteronomy 5 – 8
24 Deuteronomy 9 – 11
25 Deuteronomy 12 – 15
26 Deuteronomy 16 – 19
27 Deuteronomy 20 – 22
28 Deuteronomy 23 – 25




FEB'22-QUESTIONS

1. எங்கு விசுவாசிகளின் மாதிரியானார்கள்?
2. பவுல் எந்த தேசத்தின் சபையை பின்பற்றுங்கள் என்றார்?
3. விசுவாசத்தையும் அன்பையும் குறித்து நற்செய்தியாக சொன்னது யார்?
4. தேவன் எதற்கு அழைத்திருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது?
5. ------------------------------------------ விட்டு விலகுங்கள்.
6. எது தேவனுக்கு நீதியாய் இருக்கிறது?
7. யார் அக்கினிக் குள்ளாக்கப்படுவார்கள்?
8. பவுல் எந்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள் என்றார்?
9. யார் இடத்தில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்?
10. எதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும்?




**ஜனவரி 'மாத விடைகள் / எழுதியவர்கள்**

1. பிலி 1:8 | 2. பிலி 2:16 | 3. பிலி 2:19 | 4. பிலி 3:2 | 5. பிலி 4:8
6. கொலொ1:10 | 7. கொலொ 1:24 | 8.கொலொ 2:8 | 9.கொலொ 3:24
10.கொலொ 4:7

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜாண், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ஹெப்சிபாய் நேசமணி, திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.விவிலின் ஜுனா ஜெயக்குமார், திருமதி.பிப்லின் நெல்சன், செல்வி.அஜீன்ஷா, செல்வி.ஷெறின்ஷா, திருமதி.ஜமுனா ராணி, திருமதி.ஹெலன் கம்பீரம், திருமதி.அகஸ்டா லாரன்ஸ், திருமதி.பமீலா டேனியல், திருமதி.பிரிஸ்சில்லா ஜாண்சன், செல்வி.ஜெரின் மேக்டலின், திருமதி.ஷெரின் டியென்ஷன், திருமதி.அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your Name / Bible Quiz / Jan'22 | Sent to: csitcalain@gmail.com**

**056 766 8348**

# விடைபெறுகிறேன்...

## செயலர் மடல்



விடைபெறும் நேரத்திற்குள் வந்துவிட்டடேன்... திருச்சபையோடு பயணித்த இந்த அற்புதமான ஆறு ஆண்டுகளில், நான்கு ஆண்டுகள் திருச்சபையின் செயலராக உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு விசுவாசப் ஓட்டத்தை வெற்றியாய் ஓட கிருபை செய்த தேவாதி தேவனை துதிக்கிறேன். இந்த வாய்ப்பினை கொடுத்த தேவாதி தேவனுக்கும், சபை மக்களாகிய உங்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இதை என் வாழ்வின் மாபெரும் பாக்கியம் என கருதுகிறேன்.

தொடங்கின நாளையும், கடந்து வந்த பாதைகளையும் ஒருவிசை திரும்பி பார்க்கிறேன். என்னை கண்ணின் மணி போல் தாங்கி, பாதுகாத்து, வழிநடத்தி, ஞானத்தாலும், கிருபையினாலும் முடிசூட்டிய தேவனுக்கு முதலாவது என் நன்றிகளையும் ஸ்தோத்திரங்களையும் உரித்தாக்குகிறேன்.

ஊழியத்தின் பாதையில் எனக்கு எல்லா விதத்திலும் முழு ஒத்துழைப்பும், ஆதரவும் கொடுத்த என் குடும்பத்திற்கும், திருச்சபையின் போதகர்களுக்கும், சபைக்குழுவிற்கும், ஜெபத்தால் தாங்கின உங்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த குறுகிய கால பயணத்தில் மிக நீண்ட அனுபவத்தை எனக்குள்ளே இந்த திருச்சபை தந்தது. அதில் பல மகிழ்வும் சில வலிகளும் கலந்தே இருந்தது.

போதகர்களோடு இணைந்து நிறைவேற்றின ஊழியத்திற்காக கர்த்தரை அதிகமாய் துதிக்கிறேன்; அவர்கள் பணி மென்மேலும் சிறக்க நான் விரும்புகிறேன், ஜெபிக்கிறேன். திருச்சபையின் ஒவ்வொரு ஊழியத்தின் பொறுப்பாளர்கள், ஆலய ஆராதனையில் தன்னார்வ பணியாளர்களாய் தங்களை இணைத்துக் கொண்டு பல உதவிகளை செய்து வருகிற அன்பிற்கினிய ஒவ்வொருவரையும் மறவாமல் நினைக்கிறேன்.. திருச்சபையின் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டும், அவ்வப்போது நல்லாலோசனைகளை வழங்கி வரும் சபையின் மூப்பர்களுக்கும் நன்றி கூறுகிறேன். ஆத்தும பாரம் கொண்ட ஒவ்வொருவருடைய ஊழியப்பணி சிறக்க வாழ்த்துகிறேன். நீங்கள் செய்த, செய்கின்ற இந்த ஊழியத்தை கர்த்தர் கணக்கு வைத்து, அதற்கேற்ற பலனை நீங்களும், உங்கள்

குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் பெற்று அனுபவிக்க கர்த்தர் அருளிச் செய்வார் என முழு நிச்சயமாய் நம்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இணையதள சந்திப்புகளையோ அல்லது வழிபாட்டின் நேரடி ஒளிபரப்பையோ நம்மில் யாரும் கணித்திருக்க முடியாது. தொற்றுநோய் காரணமாக வந்த அசாதாரண சூழ்நிலையைச் கர்த்தரின் துணையோடு; சபையாக ஒன்றிணைந்து முனேடுத்து சென்றோம். கரம் கோர்த்த அனைவருக்கும் சிரம் தாழ்ந்த நன்றிகள். எதிர்காலத்திலும், இவை தொடரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது கர்த்தரின் செயல், இது நம் கண்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒருவேளை கடைசி காலங்களில் இதுபோல கடினமான சவால்கள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தாலும்; தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்போம், காலங்களை கர்த்தருக்கென்று பிரயோஜன படுத்திக்கொள்ளவோம்.

வாக்கிலும், எண்ணத்திலும், எழுத்திலும் எள்ளளவும் தகுதியில்லாத என்னை கொண்டும் 42 மாதாந்திர மன்னாகளை உங்களின் ஒத்துழைப்புடன் வடிவமைத்து வெளியிட கர்த்தர் தந்த ஞானத்திற்காய், பாராட்டின கிருபைக்காய் கர்த்தரை துதிக்கிறேன். திருச்சபையில் கடந்த ஆண்டுகளில் அநேக நிகழ்ச்சிகளை கர்த்தரின் மகிமைக்காய் செய்திடவும், அதில் சிறுவர்கள், வாலிபர்கள், என அனைவருக்கும் பயன்படவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். செயல்படுத்திவரும் சபையின் புதிய திட்டங்களுகாகவும் தேவனை துதிக்கிறேன். கர்த்தர் நன்மையானதை தருவார்.

நம்மை மீளா துயரத்தில் விட்டு சென்ற அன்பானவர்களை நினைவு கூறுகிறேன். கர்த்தர் தாமே அக்குடும்பங்களுக்கு சமாதானம் அருளி வழிநடத்தட்டும்.

அல்யென் திருச்சபையுடனான என் நட்பு என்றும் தொடரும்... உங்கள் இதயத்தில் என்னால் உண்டான காயங்களை... மன்னிக்க, மறக்க வேண்டுகிறேன். குறைகள் குற்றங்கள் பலயிருந்தும் அவற்றை பொறுத்துக்கொண்டீர்கள்; திருச்சபையின் செயலராக என்னால் இயன்றதை உங்களின் ஆதரவோடு நிறைவேற்றியிருக்கிறேன் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இப்போதும் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி இன்னொரு தேசத்திற்கு செல்ல தயாராகிக் கொண்டிருக்கிறன். நம்பிக்கையின் தேவன் எனக்கு முன்னே சென்று கோணலானவைகளைச் செம்மையாக்கி என் பாதைகளை சீர்படுத்தி என்னை நல்வழியில் நடத்திச் செல்வார் என்ற விசுவாசத்துடன் விடைபெறுகிறேன்...மகிழ்வாய் விடைகொடுங்கள்.. கர்த்தருக்கு சித்தமானால், வருகையும் தாமதிக்குமானால் மறுபடியும் சந்திபோம்..

எல்லோருக்கும் நன்றி..எல்லவற்றிற்காகவும் நன்றி..

நீங்கா நினவுகளுடன்... விடைபெறுகிறேன்...
எஸ். சுரேஷ் ராஜன்.



srsureshrajan@gmail.com

# HARVEST FESTIVAL

February
12




We cordially invite you

## 12TH FEBRUARY 2022

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
EMAIL: CSITCALAIN@GMAIL.COM | WEB: CSITAMILPARISHALAIN.ORG